©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 183A] சென்னை, செவ்வாய்கிழமை, ஜூன் 20, 2017
ஆனி 6, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2017.**

1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) திருத்தச் சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது, மாநில அரசால், அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XXX III/1958

நீண்ட தலைப்பிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான)

**1958–**ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்திற்குரிய நீண்ட தலைப்பில் "தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்" என்கின்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

முகப்புரைக்கான திருத்தம்

**3.** முதன்மைச் சட்டத்திற்குரிய முகப்புரையில் "தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்" என்கின்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்

**4.** முதன்மைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் "(தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்)" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "(தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்)" என்கின்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்

**5.** முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில்,

(1) ஓரத்தலைப்பில் "தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்'' என்கின்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 3 ஆம் பிரிவானது அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவு என மறு எண்ணிடப்பட்டவாறானதற்குப் பின்பு பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும்.

"(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் அரசு, அவசரநிலை எதன் தொடர்பாகவும் அல்லது மாநிலத்தில் சிறப்பு சூழ்நிலைகள் நிலவி வருவதன் அடிப்படையில் அல்லது அதன் பகுதி எதற்கும் அறிவிக்கையின் வாயிலாக அது பொருத்தமென நினைக்கலாகிறவாறு பிற எந்த நாளையும் சிறப்பு விடுமுறை நாளாக தொழில் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு விளம்புகை செய்யலாம்.''

**<u>நோக்க காரண விளக்கவுரை</u>**

மாநிலத்தில் அவசரநிலை எதன் தொடர்பாகவும் அல்லது சிறப்பு சூழ்நிலைகள் ஏற்படும் பொழுது என்கின்ற நேர்வில் எப்பொழுதெல்லாம் அரசு விளம்புகை செய்கிறதோ, அந்தக் குறிப்பிட்ட நாளன்று தொழில் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்பட வேண்டும் என தொழில் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், குறித்த சில பணியாளர்களுக்கு அரசு ஆணையின்படி சம்பளத்துடனான விடுமுறை விளம்புகை செய்யப்படவில்லை என அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தற்பொழுது, மாநிலத்தில் அவசரநிலை அல்லது சிறப்பு சூழ்நிலைகள் உள்ள போதான எதனின் அடிப்படையிலும் தொழில் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு சம்பளத்துடனான விடுமுறையை விளம்புகை செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிப்பதற்கான தனி வகைமுறை 1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் XXXIII/1958) இல்லை. அதன் காரணமாக மேற்சொன்ன சட்டத்தின்படி வேலையளிப்பவர் செய்யும் தவறின் அடிப்படையில் வேலையளிப்பவர் மீது நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாத நிலையில் அரசு உள்ளது. எனவே, மாநிலத்தில் அவசர நிலை அல்லது சிறப்பு சூழ்நிலைகள் எதுவும் உள்ளதன் அடிப்படையில் தொழில் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு சம்பளத்துடனான விடுமுறையை விளம்புகை செய்வதற்காக அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கென மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் XXXIII/1958–ஐ திருத்தம் செய்வது என்பது தேவையானதாக இருக்கிறது எனக் கருதப்பட்டிருக்கிறது. எனவே அரசு, மேற்சொன்ன நோக்கங்களுக்காக மேற்சொன்ன தமிழ்நாடு XXXIII/1958–ஐ பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்த சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

திங்தல் நிழையல் சபிவ்,
*தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.